DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.IV, VELLORE.

CC.NO. 250/2022

Deposition of PW1 witness for prosecution

| | | |
|---|---|---|
| Name | : | தன்ராஜ் |
| Father's Name | : | உள்ளையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 on the 03rd day of March 2023.

<u>முதல் விசாரணை தொடங்கிய நேரம்–12.50 P.M</u>

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்

1. நான் எண்.சி54, முனிசிபால் காலனி, காகிதபட்டறை என்ற முகவரியில் வசித்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்,அவர்கள் எனது உறவினார்கள் ஆவார்கள்.

2. கடந்த 30.01.2022 ம் தேதியன்று மாலை 06.30 மணியளவில் நான் எனது வீட்டிலுள்ள மாட்டு கொட்டகையில் வேலை செய்து விட்டு எனது வீட்டிற்கு சென்றபோது எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டிக்கொண்டிருந்தார்கள். நான் வீட்டிற்கு வரும்போது என் மனைவி என் மகன் அவினாஷ்யை நீ அப்பாவுடன் வரவேண்டியது தானா எதற்காக தனியாக வந்தாய் என்று திட்டிக்கொண்டு இருந்தார். அப்போது எதிரிகள்

திட்டிக்கொண்டிருந்தார்கள். வீட்டிற்கு வந்த பிறகு தான் எனது மகனை எதிரிகள் நாய்விட்டு கடிக்க வைத்தது தெரியவந்தது. ஆனால் அவர்கள் என்னை அசிங்கமாக திட்டி, சட்டையை பிடித்து 2வது எதிரி ஜார்ஜ் மண்வெட்டியின் பிடியால் என்னை என் முதுகில் அடித்தார். பரத் என்பவர் கையால் எனது முக்கில் அடித்தார். எதிரி கிரேஸ் மீனா எனது சட்டையை பிடித்து இழுத்து தலைமுடியை பிடித்து இழுத்தார். அதில் எனக்கு மூக்கிலிருந்து ரத்தம் வந்துக்கொண்டிருந்தது. சண்டையை என் வீட்டிற்கு எதிரில் இருந்த வாசுகியம்மாள், 4 வீடு தள்ளி உள்ள இயேசு, கோபி ஆகியோர்கள் பார்த்தார்கள். பின்பு நேரடியாக காவல் நிலையம் சென்றேன். ஆனால் நீ மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வந்து புகார் கொடுக்கும் படி கூறினார்கள்.

3. என் தம்பி நரேஷ்யை என்னை அடுக்கம்பாறை அரசு மருததுவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். அங்கு 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தேன். முதுகில் அடித்ததில் என்னால் எழுந்து நிற்க முடியவில்லை என்பதால் சிகிச்சை பெற்றேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் வந்து விசாரித்து என்னிடம் வாக்குமூலம்ப திவு செய்தார்களா. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுதது என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜரானார், குறுக்கு விசாரணைக்கு தயார் இல்லை என்று கூறியதன் அடிப்படையில் சாட்சியின் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறுவிசாரணை–</u>** இல்லை.

**<u>விசாரணை முடிந்த நேரம்</u>**<u>–01.00 P.M</u>